திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த நீண்ட தூரம் ஓடுகின்ற பஸ்களிலே சீட் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த சீட் முறையானது கஷ்டமாக இருக்கிறது. 2-க்கு மூன்று சீட் அமைத்திருக்கிறார்கள். இதை 2-க்கு 2 ஆக அமைத்து அதில் கைவைப்பதற்கு இடங்கள் வைத்து நல்ல முறையில் இருக்கவேண்டும். இரவு நேரங்களில் ஓடுகின்ற பஸ்களில் இந்த வசதி செய்ய முயல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இப்போது அண்மையிலே கட்டப்பட்டு விடப்பட்ட பேருந்துகள் 33-க்கு 2 வகையில் நல்ல வசதியோடு இருக்கும், மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தப் பேருந்துகளில் இன்னும் வசதிகள் வைக்காத காரணம் அந்த மெஷின்கள் எல்லாம் வாங்குவதற்கு கூட ஏற்பாடுகள் நடைபெற்றபோது அண்மையில் நடந்த யுத்தத்தின் காரணமாக அவைகளை பெற முடியவில்லை. அவைகளைப் பெறுவோமானால் எல்லா பஸகளிலும் 3-க்கு 2 வகையில் இருக்கின்ற பேருந்துகள் வசதியாக இருக்கும். இருந்தாலும் கூட 2-க்கு 2 சீட்டுகள் என்ற அளவில் டூரிஸ்டு லக்சரி கோச்சுகள் என்ற முறையில் அரசாங்க போக்குவரத்துத் துறையில் ஒரு 10 அல்லது 15 பேருந்துகள் கட்டுவதற்கு ஒரு திட்டம் நடைமுறையில் இருக்கிறது.

தொலைதூர துரிதப்பேருந்துகளின் பெயர்கள்

* 206 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தொலைதூர துரிதப் பேருந்துகளுக்கு தமிழ் மன்னர்களின் பெயரையும் தலைவர்களின் பெயரையும் வைக்கும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

Lorries emitting smoke

* 207 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that lorries and cars were booked by police in the City of Madras around the first week of September 1971 due to their emitting too much of smoke; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 1971, செப்டம்பர் திங்கள் முதல் வாரத்தில் சென்னை மாநகரத்தில் அதிகமான அளவு புகையை வெளிவிடும் காரணத்திற்காக லாரிகள் மீது மட்டுமே காவலர்களால் வழக்கு பதிவு செய்யப்பட்டது. கார்கள் பொதுவாக அதிகமான அளவு புகையை வெளிவிடா என்ற காரணத்திற்காக, கார்கள் மீது வழக்கு பதிவு செய்யப்படவில்லை.

(இ) 1971 செப்டம்பர் முதல் வாரத்தில் மும்முர ஊக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மக்கள் நல்வாழ்வுத் துறை